



# SINGLE TEACHER SCHOOLS

Unit of Swami Vivekananda Rural Development Society - Established -1979

## NEWS LETTER

Founder : **Brahmalin Dayananha Saraswathy**




**Sri. S. Vedantam Ji**
Chairman



**Shri. K.N. Krishnamurthy Ji**
Vice Chairman



**Dr. Shri. R. Krishnan Ji**
President



**Smt. Kamala Krishnamachari ji**
Vice President



**Shri. K. Anantha Narayanan ji**
Hon. Secretary



**Sri. N. Thanikasalam Ji**
Hon. Treasurer



**VOLUME 43** | **For Private Circulation** | **JANUARY 2025**


## THIS ISSUE HAS BOTH ENGLISH & TAMIL VERSIONS OF ALL ARTICLES

## இந்த இதழில் ஒவ்வொரு செய்தியும் ஆங்கிலத்திலும், தமிழிலும் தரப்பட்டுள்ளது

## A SPECIAL SECTION FOR CHILDREN AS SUTTI MADAL 6 PAGES INCLUDED

## சிறுவர்களுக்கான சுட்டி மடல் 6 பக்கங்களில் தரப்பட்டுள்ளது

- Development Projects in Villages in the Fields of Education
- கிராமங்களில் கல்வி அபிவிருத்தி திட்டங்கள்
- Health – Hygiene – Construction of individual Toilets cum Bathrooms for the Poor Family
- ஆரோக்கியம் – சுத்தம் – ஏழை குடும்பத்திற்கு தனிப்பட்ட கழிப்பறையுடன் கூடிய குளியலறைகள்
- Protection of Water Storing & Environment
- தண்ணீர் சேகரிப்பு – சுற்றுப்புற பாதுகாப்பு
- Employment Assured Skill Training
- வேலை உத்திரவாதத்துடன் கூடிய திறன் பயிற்சி

# FREE CERVICAL CANCER VACCINATION CAMP



Single Teacher Schools conducts CERVICAL CANCER VACCINATION CAMP every month. Unmarried Girls in the age group of 9 to 24 are eligible for Vaccination to prevent possibility of CERVICAL CANCER. SANKALP BEAUTIFUL WORLD Founder & Chairman Dr. K. Latchumana Dhas, Leading Cardiologist & Shri. C. Goutham Chandar, Founder & CEO taking initiative in arranging Doctors & Medical team from Madras Medical Mission Hospitals and for Vaccine from Serum Institute for every camp. So far, around **1680** unmarried girls were vaccinated.



13th Camp on October 6th & 14th Camp on November 17th 2024, in which 130 / 200 Girls were given Vaccination respectively. Shri. Kulkarni Trustee SANKALP BEAUTIFUL WORLD with his wife participated. Doctor from Madras Medical Mission Hospitals explained about the vaccination and its benefits to individuals during check-up. M/s. Malladi Drugs and Pharmaceuticals Ltd. are the sponsors of the Vaccination program.

# இலவச கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தும் முகாம்



ஓராசிரியர் பள்ளிகளின் சார்பில் திருமணமாகாத பெண்களுக்கு கர்ப்பப்பை வாய் புற்று நோய்க்கான தடுப்பூசி செலுத்தும் முகாம் 2024, அக்டோபர் மாதம் 6 மற்றும் நவம்பர் 17 தேதிகளில் 13ஆவது மற்றும் 14ஆவது முகாம்கள் நடைபெற்றது. அதில் 130 / 200 பெண்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்டனர். சங்கல்ப் பியூட்டிஃபுல் வேர்ல்ட் ஏற்பாட்டில் நடைபெற்ற முகாமில் ரூபாய் **2500/–** மதிப்புள்ள தடுப்பூசி, மல்லாடி டிரக்ஸ் அண்ட் பார்மசூட்டிகல்ஸ் நிறுவனம் நிதி உதவியுடன் பெண்களுக்கு இலவசமாக செலுத்தப்பட்டது.




இந்நிகழ்ச்சியில் மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவர் தடுப்பூசியின் சிறப்புகளை விளக்கினார். பின்னர் மருத்துவ நிபுணர்கள் பயனாளிகள் பரிசோதனை செய்த பின் தடுப்பூசி செலுத்தினர். இம் முகாமில் 120 பெண்கள் பயனடைந்தனர். சங்கல்ப் பியூட்டிஃபுல் வேர்ல்ட் சார்பில் ஸ்ரீ. குல்கர்னி மனைவியுடன் கலந்து கொண்டார். மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் சார்பில், சீரம் இன்ஸ்டிடியூட் சார்பில் கலந்து கொண்டவர்களுக்கு ஓராசிரியர் பள்ளிகளின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

# 68th FREE CANCER DETECTION CAMP



In the ENDEAVOUR to take care of the public on health FREE CANCER Detection Camps are conducted from the year 2017. In association with Dr. Ramanan, Leading ONCOLOGIST from Apollo Hospitals, Chennai & Doctors from CanCare Foundation and Medical Assts from Anderson Labs awareness camps are conducted in villages for screening the public. Doctors test mainly Cervic, Breast & Mouth cancer symptoms.



Once in a month this camp is being held and so far around **6800** public were screened and suspected persons were taken to Kumaran Hospitals, Chennai for further testing. 68th such camp was held at Aayal Village near Sholingur, Ranipet district on October 19th in which 40 women and 14 men were screened and no detection of Cancer. Panchayat President and Councillor inaugurated the camp. Dr. Kanimozhi & Dr. Janardhana Kani from CanCare addressed the public to brief them about Cancer, prevention and the method of inspection to be carried out in the camp.

# 68வது புற்றுநோய் பரிசோதனை முகாம்





ஓராசிரியர் பள்ளிகள் மற்றும் சென்னையைச் சேர்ந்த கேன்கேர் அமைப்பும் சேர்ந்து 2017 முதல் இலவச புற்றுநோய் கண்டறிதல் முகாம்கள் கிராமங்களில் நடத்தி உள்ளனர். 2024, அக்டோபர் மாதம் 19 ம் தேதி அன்று சோளிங்கர் அருகே உள்ள ஆயல் கிராமத்தில் புற்றுநோய் கண்டறிதல் முகாம் நடைபெற்றது. இதில் கேன்கேர் பவுண்டேஷன் சார்பில் டாக்டர். ஜனார்த்தன கனி, டாக்டர். கனிமொழி அவர்களும் ஆண்டர்ஸன் லேபில் இருந்து நிபுணர்களும் கலந்து கொண்டு பரிசோதனைகள் மேற்கொண்டனர். இதில் 54 நபர்கள் (40 பெண்கள் + 14 ஆண்கள்) இலவசமாக பரிசோதனைகள் செய்து கொண்டனர். முன்னதாக கேன்கேர் அமைப்பின் டாக்டர். ஜனார்த்தன கனி மற்றும் டாக்டர். கனிமொழி அவர்களும் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு உரை ஆற்றினர். முகாமிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ. செந்தில்குமார், ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீ. ராஜசேகர், ஆச்சார்யாக்கள் சிறப்பாக செய்து இருந்தனர்.

# DONATION / நன்கொடை

Shri. Adi Saravanan, a Charted Accountant an entrepreneur of a large IT Service Company, residing in Chennai started interacting with STS. Very much impressed by the welfare Projects of STS, he has committed to get associated with STS more and more in the coming years.

To start with, he has given a donation of **Rs.50.00 Lakhs** towards sponsorship of Schools, Construction of Toilet cum Bathrooms and Skill Centre. STS Welcomes his association and look forward to work on more projects with his support.

சென்னையை சேர்ந்த ஸ்ரீ. ஆதி சரவணன், சார்ட்டட் அக்கௌண்டன்ட், கம்ப்யூட்டர் கம்பெனியின் தொழிலதிபர் அவர்கள் ஓராசிரியர் பள்ளிகளுடன் தொடர்பு கொண்டு அதன் நலத்திட்டங்களில் திருப்தி கொண்டு ஓராசிரியர் பள்ளிகளுடன் வரும் காலங்களில் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்தார். முதற்கட்டமாக ரூபாய் **50.00 லட்சம்,** சில ஓராசிரியர் பள்ளிகள் இயங்குவதற்கும், கழிப்பறையுடன் கூடிய குளியலறைகள் கட்டுவதற்கும், திறன் பயிற்சி மைய செயல்பாட்டிற்குமாக நன்கொடை அளித்துள்ளார். ஓராசிரியர் பள்ளிகளின் நிர்வாகம் நன்கொடையாளரை வரவேற்பதுடன் வரும் காலங்களில் அவரிடம் இருந்து பல திட்டங்களுக்கு அன்னாரின் ஆதரவை வரவேற்கிறோம்.

# FREE EYE TESTING CAMP



Single Teacher Schools conducts Free Eye Testing camps sponsored by Corporates to ensure the villagers where Single Teacher Schools are functioning have their Eyes tested. Glasses provided for the needed and cataract surgeries done for the needed public. Everything is carried out at free of cost.

## 122nd FREE EYE TESTING CAMP



M/s. SANKARA NETHRALAYA, Chennai visits the camp with Ophthalmologists Doctors, Technicians with required equipment for carrying out Advanced testing. Once in a month this camp is held with the support of concern Village Panchayat Presidents. On 23rd November 2024 Free eye testing camp was held at Irullancherry Village, Sriperumpudur SANCH which was sponsored by M/s. SAINT GOBAIN INDIA PVT. LTD., Shri. Kannan of Sankara Nethralaya explained about the camp before starting of the program.

In this camp, the total villagers screened - 84 (Male - 22 + Female - 62). Fundus examination for- 16, cataract identified for 13 and free spectacles referred for 62 persons (Single vision - 27 & Bifocal - 35) to be handed over to them at the village itself. Shri. S. Senthilkumar IC, Shri. Manivannan Field Supervisor, 3 Acharyas who made all arrangements for the successful completion of the camp were present during the camp.

## FIRST EYE CAMP WITH RADHATRI NETHRALAYA – CHENNAI

In addition to the existing Eye camps one more Eye Camp held at Vayalur Village, Sriperumbudur Sanch on 16th Nov 2024. Doctors and Ophthalmology Technicians from M/s. RADHATRI NERTHRALAYA – Chennai with advanced instruments visited the camp and carried out testing. Total 78 villagers participated the camp and underwent screening. Referred 26 for cataract and recommended spectacles for 34. Free spectacles to be handed over to them at the village itself. Shri. D. Ravi, Admin STS, Field Supervisor and Acharya made all arrangements for the successful completion of the Camp.

# இலவச கண் பரிசோதனை முகாம்



ஓராசிரியர் பள்ளிகள் சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் மாதாமாதம் தொழில் நிறுவனங்களின் ஆதரவுடன் ஓராசிரியர் பள்ளிகள் செயல்படும் கிராமங்களில் நடத்தி தகுதி உள்ளவர்களுக்கு இலவச கண்ணாடியும், இலவச கண் புரை அறுவை சிகிச்சையும் செய்யப்படுகிறது.

## 122 வது இலவச கண் பரிசோதனை முகாம்



M/s. Saint Gobain India Pvt.Ltd., என்ற நிறுவனத்தின் ஆதரவுடன் இந்த இலவச கண் பரிசோதனை முகாம்கள் நடைபெறுகின்றன. நவம்பர் மாதம் 23 ம் தேதி அன்று 122வது முகாம் ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள இருளஞ்சேரி கிராமத்தில் நடைபெற்றது. பொதுமக்கள் 84 பேர் கலந்து கொண்டனர். 62 நபர்களுக்கு கண்ணாடி பரிந்துரைக்கப்பட்டது. சென்னையில் உள்ள சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் இருந்து மருத்துவ நிபுணர்கள் வந்திருந்து பரிசோதனைகள் மேற்கொண்டனர். முகாம் துவங்குவதற்கு முன் சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் இருந்து வந்திருந்த மருத்துவ நிபுணர்கள் இம்முகாமின் அவசியத்தை விளக்கினார்கள். முகாம் சிறப்பாக நடைபெற எல்லா ஏற்பாடுகளையும் ஆய்வு ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ. S. செந்தில் குமார் அவர்களும், கள மேற்பார்வையாளர் ஸ்ரீ. மணிவண்ணன் மற்றும் 3 ஆச்சாரியர்கள் மிக சிறப்பாக செய்திருந்தனர்.

## ராதாத்ரி நேத்ராலயா மருத்துவமனையுடன் முதல் முகாம்

சென்னையில் உள்ள ராதாத்ரி நேத்ராலயா மருத்துவமனையுடன் இணைந்து ஓராசிரியர் பள்ளிகள் நடத்தும் முதலாவது இலவச கண் பரிசோதனை முகாம் ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள வயலூர் கிராமத்தில் நவம்பர் மாதம் 16ம் தேதி அன்று நடைபெற்றது. பொதுமக்கள் 78 பேர் கலந்து கொண்டனர். சென்னையில் உள்ள ராதாத்ரி நேத்ராலயா மருத்துவமனையில் இருந்து மருத்துவ நிபுணர்கள் சிறப்பு பரிசோதனை உபகரணங்களுடன் வந்திருந்து பரிசோதனைகள் மேற்கொண்டனர். 26 நபர்களுக்கு கண் புரை அறுவை சிகிச்சைக்கும் 34 நபர்களுக்கு கண்ணாடியும் பரிந்துரைக்கப்பட்டது. ஆய்வு ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ. D. ரவி அவர்களும், மருத்துவ நிபுணர்களும் முகாமினை தொடங்கி வைத்து இலவச கண் பரிசோதனை முகாம் பற்றி விளக்கினார்கள். கள மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆச்சாரியர்கள் முகாம் சிறப்பாக நடைபெற எல்லா ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருந்தனர்.

# VISIT BY DR.SHRI.R.KRISHNAN, PRESIDENT TO MAYILADUTHURAI SANCH



On 25th Nov 2024 SVRDS President Dr. Shri. R. Krishnan visited Mayiladuthurai to preside over meeting with Acharyas. After prayers the meeting started with shlokas from Bhagavad Gita by President Dr. Shri. R. Krishnan explained the meaning of shlokas to Acharyas and the importance of chanting of Gayathri Mantra. He elaborated to Acharyas the various activities of SVRDS & STS. The important role of Acharyas in molding the students with Good Culture, was explained. The President said that very soon other projects like construction of Toilet cum Bathrooms to the needed public and Medical Camps in villages will also be started in that area. The sponsors of centers in around Mayiladuthurai are M/s. Kinjithkaram Trust of Upanyasagar Shri. Ue.Ve. Velukudi Swamigal, Shri. Saravanan, Philanthropist from Chennai and CRI Pumps - Coimbatore. Shri. K. Jagadesan Ji, SVRDS Managing Committee Member also attended the training session.

# SVRDS PRESIDENT DR. ஸ்ரீ. R. கிருஷ்ணன் அவர்களின் மயிலாடுதுறை சஞ்ச் ஆச்சாரியார் கூட்டத்தில் பங்கேற்பு.



2024 நவம்பர் மாதம் 25 ம் தேதி அன்று மயிலாடுதுறை மாவட்டம் கோழிகுத்தி கிராமத்தில் உள்ள ஓராசிரியர் பள்ளிகளின் அலுவலகத்தில் நடைபெற்ற மயிலாடுதுறை சஞ்ச் ஆச்சாரியார் கூட்டத்தில் SVRDS தலைவர் Dr.ஸ்ரீ R. கிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டார். கடவுள் வாழ்த்துக்கு பின் தலைவர் அவர்கள் பகவத்கீதையில் இருந்து ஸ்லோகம் சொல்லி, அதன் பொருளையும் கூறி கூட்டத்தை துவக்கி வைத்தார். அவர் தனது உரையில் காயத்ரி மந்திரத்தின் மகிமையையும் விளக்கினார். பின்னர் மாணவ மாணவிகளுக்கு நல்ல அறிவையும், ஒழுக்கத்தையும் கற்று கொடுப்பதில் ஆசாரியர்களின் முக்கிய பங்கினையும் எடுத்துரைத்தார். ஓராசிரியர் பள்ளிகளின் சார்பில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை பற்றி விளக்கினார். இங்கு இயங்கும் ஓராசிரியர் பள்ளிகள் உபன்யாசகர் ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி ஸ்வாமிகளின் கிஞ்சித்காரம் டிரஸ்ட், சென்னையை சேர்ந்த சமூகத்தின் மீது அக்கறை கொண்ட Philanthropist ஸ்ரீ. சரவணன் அவர்கள் மற்றும் கோவையைச் சேர்ந்த CRI Pumps ஆகியோரின் ஆதரவுடன் இயங்கி வருகின்றன. இந்த கூட்டத்தில் SVRDS கமிட்டி உறுப்பினருமான ஸ்ரீ. ஜெகதீசன் ஜி தனது மனைவி ஸ்ரீமதி வசந்தா ஜெகதீசன் அவர்களுடன் கலந்து கொண்டார். மயிலாடுதுறை சஞ்ச் ஆய்வு ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ. வெங்கடேஷ் அவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் தற்போது பணிபுரியும் 40 ஆச்சாரியார்கள் கலந்து கொண்டனர்.

# ACHARYAS MONTHLY TRAINING





In ensuring quality education given to the children in villages through Single Teacher Schools, we conduct Masik Bhaitek (Monthly Training) for all Acharyas. Around 100 to 150 Acharyas will be trained every month. Like this, at different blocks training will be held. Field Supervisors are selected from various Sanch and given special training. The Acharyas will also be educated on conducting parents meeting, how to coordinate with parents, how to spread the different activities carried out by SVRDS etc. Concerned Sanch Inspection Coordinators also be present during this special training and they will also participate in training the Acharyas about discipline, Moral, in handling children, how to keep in touch with parents, Village heads and school officials to follow up about the progress of STS Students.

On 6-10-2024 training held at Samuthaya Koodam, V. Pudur near Sholingur, Ranipet District for Acharyas belongs to Ammayarkuppam, Sholingur 1 and Sholingur 2 Sanchs in which 77 Acharyas participated. Shri. Venkat Krishna, Inspection Coordinator arranged for the training. On 23rd November 2024 another training session was held for Poondi & Tiruvallur Sanch Acharyas. 45 Acharyas attended the training. Shri. D. Ravi, Inspection Coordinator inaugurated the training session by lighting kuthu villaku. In the afternoon after training all subjects, an exam was conducted to Acharyas from the subjects of training given.

## ஓராசிரியர் பள்ளி ஆச்சாரியர்களுக்கான மாதாந்திர பயிற்சி





ஒவ்வொரு மாதமும் அருகில் உள்ள சஞ்ச்களை சேர்ந்த ஆச்சாரியர்களுக்கு ஒரு இடத்தில் மாதாந்திர பயிற்சி அளிக்கபடுகிறது. இதில் சிறப்பு பயிற்சி அளிக்கபட்ட கள மேற்பார்வையளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாடத்தினை பயிற்றுவிப்பார்கள். 6–10–2024 அன்று அம்மையார்குப்பம், சோளிங்கர் 1 & 2 ஆச்சார்யார்களுக்கு பயிற்சி நடைபெற்றது. ஆய்வு ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ. K. வெங்கட கிருஷ்ணா சிறப்பாக பயிற்சி வகுப்புகளை நடத்தினார். 2024 நவம்பர் மாதம் 23 ம் தேதி அன்று பூண்டி மற்றும் திருவள்ளூர் சஞ்ச்களை சேர்ந்த ஆச்சாரியர் களுக்கு மாதாந்திர பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. ஆய்வு ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ. D. ரவி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றிய பின்னர் கடவுள் வாழ்த்துடன் பயிற்சி வகுப்புகள் தொடங்கபட்டன. ஸ்ரீ. D. ரவி தமது உரையில் பயிற்சி வகுப்புகளின் அவசியத்தினையும், மாலைநேர ஓராசிரியர் பள்ளிகளுக்கு மாணவ மாணவிகளின் வருகையின் முக்கியத்துவத்தினையும் அதில் ஆச்சாரியர்களுக்கான முக்கிய பங்கிணையும் எடுத்துரைத்தார்.

# FEEDBACK OF DR. RAJAMMAL VISIT



**Swami Vivekananda Rural Development Society, Single Teacher Schools.**

**"Education is not preparation for Life, Education is LIFE itself."**

I, Dr. R. Rajammal, Educational Consultant of STS, visited four Villages at Sriperumbudur Sanch, on 7.12.2024. It was a surprise visit indeed to Kachipattu Village, Sriperumbudur 4. First impression is the best impression. Acharya S. Sharmila's centre was simply amazing. Excellent Assembly programme by Students, interactive session, informative Teaching Aid and perfect Record maintenance. Students were bubbling with energy and enthusiasm. Certainly she is a role model for all the Acharyas. The other Centres I visited were Pattunulchathiram Village, Sriperumbudur 4, Acharya: Santhanalakshmi, Kiloy 1, Sriperumbudur 1, Acharya: Keerthika, Kiloy 2, Sriperumbudur 1, Acharya: S. Gowthami. Students were very receptive and eager to learn. The Acharyas are dedicated to their services. Assembly program has created a very good impact among the children. Their learning is an amalgamation of Indian culture and knowledge. They are gaining self confidence and positive attitude. STS is aiming at quality education with all round development for the Students. Rural students are second to none. Given the right platform, the students will shine well. The Acharyas covered topics on Healthy Food, Plant Life, planets of Solar System, Child safety, Good touch and bad touch.

**I am sure the Students of STS will make a difference in the society, Best wishes.**

**Dr. R. Rajammal, National Awardee Educationist, Women Achiever & Social Ambassador.**

## டாக்டர். ஆர். ராஜம்மாள் அவர்களின் கள ஆய்வு கருத்து

**"கல்வி என்பது வாழ்க்கைக்கான தயாரிப்பு அல்ல, கல்வியே வாழ்க்கை.."**



ஓராசிரியர் பள்ளிகளின் கல்வி ஆலோசகரான டாக்டர். ஆர். ராஜம்மாள், 7.12.2024 அன்று ஸ்ரீபெரும்புதூர் சஞ்சில் உள்ள நான்கு கிராமங்களுக்கு உண்மையில் ஒரு முன்னறிவிப்பும் இல்லாத கள ஆய்வு விஜயம் மேற்கொண்டேன். கச்சிப்பட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர்–4 சஞ்சில் உள்ளது. ஆச்சார்யா எஸ். ஷர்மிளாவின் மையத்தில் முதல் எண்ணமே சிறந்த ஊக்கமாக, ஆச்சரியமாக இருந்தது. மாணவர்களின் சிறந்த அசெம்பிளி நிகழ்வு, கலந்துரையாடல், சிறந்த கற்பித்தல் உத்தி மற்றும் சரியான பதிவேடுகள் பராமரிப்பு மிக சிறப்பாக இருந்தது. மாணவர்கள் ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் இருந்தனர். நிச்சயமாக ஆச்சார்யா எஸ்.ஷர்மிளா அனைத்து ஆச்சார்யாக்களுக்கும் ஒரு முன்மாதிரி. நான் பார்வையிட்ட மற்ற மையங்கள் பட்டுநூல்சத்திரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர்–4 சஞ்ச் ஆச்சார்யா: சந்தானலட்சுமி, ஸ்ரீபெரும்புதூர் 1 சஞ்ச் கிளாய் 1, ஆச்சார்யா: கீர்த்திகா, கிளாய் 2, ஆச்சார்யா: எஸ். கௌதமி. மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் கல்வி கற்க விரும்புவதை உணர முடிந்தது. ஆச்சார்யர்கள் சேவை மனப்பான்மை மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றனர்.

அசெம்பிளியுடன் வகுப்பு துவங்குவது குழந்தைகளிடையே நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்களின் கற்றல், இந்திய கலாச்சாரம் மற்றும் அறிவின் கலவையாகும். அவர்கள் தன்னம்பிக்கை மற்றும் நேர்மறையான அணுகுமுறையைப் பெறுகிறார்கள். ஓராசிரியர் பள்ளிகளின் கல்வி, மாணவர்களுக்கான அனைத்து வளர்ச்சியுடன் கூடிய தரமான கல்வியை இலக்காகக் கொண்டுள்ளது. கிராமப்புற மாணவர்கள் யாரும் இரண்டாம் பட்சம் அல்ல, சரியான மேடை கொடுத்தால் நன்றாக ஜொலிப்பார்கள். ஆச்சார்யாக்கள் பயிற்றுவிக்கும் விளக்கப்படங்கள் (Charts) ஆரோக்கியமான உணவு, தாவர வாழ்க்கை, சூரிய மண்டலத்தின் கிரகங்கள், குழந்தை பாதுகாப்பு, நல்ல தொடுதல் மற்றும் கெட்ட தொடுதல், யோகா போன்ற பல தலைப்புகளை உள்ளடக்கியது.

**ஓராசிரியர் பள்ளிகளின் மாணவ, மாணவிகள் சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். மனமார்ந்த வாழ்த்துக்கள்.**

**டாக்டர். ஆர். ராஜம்மாள், தேசிய விருது பெற்ற கல்வியாளர், பெண் சாதனையாளர் – சமூக தூதுவர்.**

# STS Hi-ED TRAINING TO 6th, 7th, 8th & 9th STANDARD STUDENTS



STS Hi-Ed a significant development in STS to take care of Children Education in rural areas. Bridges scientific innovation divide & will excel in building scientific temperament & innovative thinking. After successful completion of first year, now this project is being run for the second year. Now the training is extended to 9th standard also. Now nearly 70 students studying in STS from the villages of Kottaiyur, Mathuramangalam & Mel Maduramangalam are attending the classes held on 3 Sundays every month at our SVRDS Shri. R.P. Krishnamachari Skill Training Center Building. Students are trained well by the team of CENTRADO who supplied kits for Tinkering, Science & Maths courses. Computer operation also being trained by STS Staff and the students are provided with individual computers to work on it as per the Tutors guidelines. Once in a quarter the students' skill is evaluated by conducting tests and the training is modified to suit accordingly. Smt. Gayathri Indra Seenumani - USA and IDRF - USA support STS Hi-Ed training .



The Trainers are taking classes for the kits in each subject and through Video presentation also. For the Maths classes, the Acharyas of the above villages along with few more are given exclusive Face to Face training once in a month by experts' form INSPIRE MATHS Chennai. These trainers visit villages where STS Hi-Ed classes are conducted once in every month to assess Acharyas as well as students and to improve training accordingly.

## STS Hi-Ed - திறன்பயிற்சி - 6,7,8 & 9ம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு



அமெரிக்கவாழ் இந்தியரான ஸ்ரீமதி. காயத்ரி இந்திரா சீனுமணி & IDRF - USA அவர்களின் முயற்சியாலும், நன்கொடையாலும் 6,7 மற்றும் 8ம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் விதத்தில் நிபுணர்களின் உதவியுடன் சிறப்பு செய்முறை மற்றும் பாடதிட்டங்களின் படி Tinkering, Science & Computer பயிற்சிகள் 2023 ஜீலை மாதம் முதல் அளிக்கப்படுகின்றன. கோட்டையூர், மேல்மதுரமங்கலம், மதுரமங்கலம் கிராமங்களில் இயங்கும் ஓராசிரியர் பள்ளிகளில் பயிலும் 6,7,8 மாணவ, மாணவிகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் SVRDS ஸ்ரீ R.P. கிருஷ்ணமாச்சாரி திறன் பயிற்சி மையத்தில் அமைந்துள்ள பயில் அரங்கங்களில் சென்னையை சேர்ந்த CENTRADO பயிற்சியாளர்கள் மூலம் பயிற்சி பெறுகின்றனர். 2024 ஜுலை முதல் MATHS செய்முறை பயிற்சி கூடம் அமைக்கபட்டு கணித பாடங்களும் பயிற்றுவிக்கபடுகின்றன, மேலும் 9 ம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. பெற்றோர்கள், அவர்கள் குழந்தைகளின் முன்னேற்றத்தினைக் கண்டு ஓராசிரியர் பள்ளி நிர்வாகிகளை பாராட்டுகிறார்கள். 3 மாதத்திற்கு ஒரு முறை தேர்வுகள் நடத்தபட்டு மாணவ மாணவிகளின் திறன் அறிந்து ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஆச்சார்யார்களுக்கு பயிற்றுவிக்கும் INSPIRE MATHS நிபுணர்கள் மாதம் ஒருமுறை STS-Hi-Ed பள்ளிகளுக்கு சென்று பயிற்றுவித்ததை மாணவ, மாணவியர்களுக்கு சரியாக சென்றடைவதை உறுதி செய்கின்றனர்.



# ADVANCED MATHS TRAINING TO ACHARYAS



Advanced Maths Training for Acharyas completed by two years of vigorous training every month for 120 Acharyas by experts in Maths from INSPIRE MATHS headed by Smt. Meena Suresh and her team will continue third year training from this July month.

On October 20th 2024, 17th Nov & 15th December 2024 monthly training held at SVRDS Acharya Training Center for the first batch of Acharyas.

On 25th Aug 2024 at Kalai Bharathi College of Education, Sholingur training for second batch of 100 Acharyas of various Sanch started. The monthly training for them held on 27th October 2024, 25th Nov and 22nd December 2024 at the same premises. The trainers also visit the centres periodically to have an on the spot analysis of training by interacting with students to analyse the transformation of what they taught, from Acharyas to students.

## மேம்படுத்தபட்ட கணித பயிற்சி



ஓராசிரியர் பள்ளி ஆச்சாரியார்களுக்கு மேம்படுத்தபட்ட (அட்வான்ஸ்டு) கணித பயிற்சி அளிக்கும் வகுப்புகள் கடந்த 2 வருடங்களாக நடைபெற்று வருகின்றன. இதில் 120 ஆச்சாரியர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர். சென்னையில் உள்ள INSPIRE MATHS என்ற நிறுவனத்தின் நிபுணர்கள் ஸ்ரீமதி. மீனா சுரேஷ் மற்றும் 3 பயிற்சியாளர்களை கொண்டு மாதாமாதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2024 அக்டோபர் மாதம் 20ம் தேதி, நவம்பர் மாதம் 17ம் தேதி மற்றும் டிசம்பர் மாதம் 15ம் தேதிகளில் இந்த பயிற்சி நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக இன்னும் 100 ஆச்சாரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் விதமாக இரண்டாவது மேம்படுத்தபட்ட (அட்வான்ஸ்டு) கணித பயிற்சி வகுப்புகள் ஆகஸ்ட் மாதம் 25ம் தேதி அன்று துவக்கப்பட்டது. சோளிங்கர் அருகில் உள்ள Kalai Bharathi College of Education கல்லூரியில் மாதம் தோறும் பயிற்சி அளிக்க அனுமதி அளித்து உள்ளனர். 2024 அக்டோபர் மாதம் 27ம் தேதி, நவம்பர் மாதம் 25ம் தேதி மற்றும் டிசம்பர் மாதம் 22ம் தேதிகளில் இந்தபயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. மேலும் பயிற்சியாளர்கள் கிராமங்களில் உள்ள ஓராசிரியர் பள்ளிகளுக்கு மாதாமாதம் சென்று ஆச்சாரியர்களுக்கு பயிற்றுவித்தது சரியாக மாணவர்களுக்கு செல்கிறது என்பதை உறுதி செய்ய விஜயம் செய்கின்றனர்.



# சுட்டி மடல்

## மார்கழி மாதத்தின் சிறப்புகள்



- தமிழ் மாதங்களில் மார்கழி மாதம் ஒன்பதாவது மாதமாகும். இந்த மாதம் முழுவதும் இறைவனுக்கு உகந்ததாகவே போற்றப்படுகிறது.
- ஸ்ரீகிருஷ்ண பகவான் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று பகவத் கீதையில் அருளியுள்ளார்.
- மார்கழி மாதம் முழுவதும் இறைவனை வழிபடுவதால் இம்மாதத்தில் எவ்வித குடும்ப மங்கள விழாக்கள் நடத்தப்படுவதில்லை.
- இம்மாதம் தேவர்களுக்கு அதிகாலை நேரமாக கருதப்படுகிறது. இந்த மாதத்தில் அதிகாலை நீராடி ஆலய தரிசனம் செய்வது மிகவும் சிறப்பாகும்.

**திருப்பாவை, திருவெம்பாவை:**
ஆண்டாள் நாச்சியார் “மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்” என்றும், மாணிக்கவாசக நாயனார் திருவெம்பாவையில், “போற்றியாம் மார்கழி நீர் ஆடேலோர் எம்பாவாய்” என்றும் அதிகாலை வழிபாடு மகத்துவம் பற்றி பாடியுள்ளார்கள்.

**அறிவியலின்படி மார்கழி மாதத்தில் அதிகாலை வழிபாடு:**
மார்கழியில் அதிகாலையில் எழுந்து நடக்கும் போது இயற்கை காற்றை சுவாசிப்பதால் மனிதர்களுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களும் குணமாகும் என்று முன்னோர் அறிந்து கொண்டதால், ஆண்கள் நாம சங்கீர்த்தனம் பாடி நகர் வலம் வருவதும், பெண்கள் காலையில் கோலம் போடுவதும் இம்மாதத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. அறிவியலின்படி மார்கழி மாதத்தில் ஆக்ஸிஜன் நிறைந்த ஓசோன் படலம் பூமிக்கு மிக அருகில் அதிகாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை இருக்கும். ஓசோன் வாயு நுரையீரலுக்கு சென்று புத்துணர்ச்சி உண்டாக்கும். மார்கழி மாத காற்று சருமத்திற்கும், உடல் நலத்திற்கும் மிகவும் நல்லது என்பதை விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சியிலும் தெரியவந்துள்ளது.

## தை மாதத்தின் சிறப்புகள்

**ஓராசிரியர் பள்ளிகளின் அலுவலக பணியாளர்கள், கள மேற்பார்வையாளர்கள், ஆச்சார்யார்கள், பயிலும் மாணவ, மாணவியர் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகள்!!!**


**தலைவர் Dr. ஸ்ரீ. R. கிருஷ்ணன்**

**பொங்கல் பண்டிகை**
தமிழகத்தில் பொங்கல் பண்டிகை என கொண்டாடப்படக்கூடிய நிலையில், பல்வேறு மாநிலங்களில் மகர சங்கராந்தி என ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பீகார், மகாராஷ்டிரா, கோவா, நேபாளம், ஜம்மு போன்ற மாநிலங்களில் கொண்டாடப்படுகிறது. புஷ் சங்கராந்தி என மேற்கு வங்கம், வங்கதேசம், போன்ற இடங்களில் கொண்டாடப்படுகிறது.

**பொங்கலோ பொங்கல்**
தைத்திருநாள் அன்று சூரிய பகவானுக்காக வீட்டின் முன் பொங்கல் படைத்து வழிபாடு செய்வார்கள். அப்போது புதிதாக அறுவடை செய்யப்பட்ட அரிசி, கரும்பு, மஞ்சள், வெல்லம் உள்ளிட்டவற்றைப் பயன்படுத்துவார்கள். பொங்கல் பொங்கி வரக்கூடிய நேரத்தில் **பொங்கலோ, பொங்கல்** என மக்கள் உரக்கச் சொல்வர்.

**நான்கு நாள் திருவிழா**
பொங்கல் பண்டிகை நான்கு நாள் திருவிழாவாக கொண்டாடப்படுகிறது.

**போகி முதல் நாள்**
பழையன கழித்தல், புதியன புகுத்தல் என்பதை உணர்த்தக்கூடியது போகி பண்டிகை. மார்கழி மாதம் முடியக்கூடிய கடைசி நாளில் இந்த பண்டிகை கொண்டாடப்படுகிறது.



**தைப்பொங்கல் இரண்டாம் நாள்**
தை மாதத்தின் முதல் நாள் பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது.

**மாட்டுப் பொங்கல் மூன்றாம் நாள்**
உழவுக்கும், வேளாண் பெருங்குடியினருக்கும் பல வகையில் உதவிகரமாக இருக்கக்கூடிய பசுக்கள், காளைகள் உள்ளிட்ட விலங்குகளையும் கொண்டாடும் விதமாக இந்த மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

**காணும் பொங்கல் நான்காம் நாள்**
அறுவடை முடிந்து மக்கள் திருவிழா கொண்டாடக்கூடிய மகிழ்ச்சியான தினத்தில், மக்கள் தங்களின் உறவினர்களை சந்தித்து அன்பையும், உணவுப் பொருட்களையும் பரிமாறிக் கொள்ளக்கூடிய அற்புதமான தினம்.


## உலக நாடுகளில் முதல் பத்து நாடுகளின் தர வரிசை பட்டியல்

### TOP 10 LARGEST ECONOMIES IN THE WORLD IN 2024

| RANK | COUNTRY | GDP (USD BILLION) | GDP PER CAPITA (USD THOUSAND) |
|---|---|---|---|
| 1 | USA | 27,974 | 83.06 |
| 2 | China | 18,566 | 13.16 |
| 3 | Germany | 4,730 | 56.04 |
| 4 | Japan | 4,291 | 34.55 |
| 5 | India | 4,112 | 2.85 |
| 6 | UK | 3,592 | 52.43 |
| 7 | France | 3,182 | 48.22 |
| 8 | Italy | 2,280 | 38.93 |
| 9 | Brazil | 2,272 | 11.03 |
| 10 | Canada | 2,242 | 55.53 |

Source: IMF

## மனித உடல் உறுப்புகளின் பெயர்கள்




## இந்தியாவில் உள்ள மாநிலங்கள் மற்றும் தலைநகரங்கள்

### States and Capitals of India

| S.No | States Name | Capital | Founded on |
|---|---|---|---|
| 1 | Andhra Pradesh | Amaravati | 1 Nov. 1956 |
| 2 | Arunachal Pradesh | Itanagar | 20 Feb. 1987 |
| 3 | Assam | Dispur | 26 Jan. 1950 |
| 4 | Bihar | Patna | 26 Jan. 1950 |
| 5 | Chhattisgarh | Raipur | 1 Nov. 2000 |
| 6 | Goa | Panaji | 30 May. 1987 |
| 7 | Gujarat | Gandhinagar | 1 May. 1960 |
| 8 | Haryana | Chandigarh | 1 Nov. 1966 |
| 9 | Himachal Pradesh | Shimla (Summer) Dharamsala (Winter) | 25 Jan. 1971 |
| 10 | Jharkhand | Ranchi | 15 Nov. 2000 |
| 11 | Karnataka | Bengaluru / Bangalore | 1 Nov. 1956 |
| 12 | Kerala | Thiruvananthapuram | 1 Nov. 1956 |
| 13 | Madhya Pradesh | Bhopal | 1 Nov. 1956 |
| 14 | Maharashtra | Mumbai | 1 May. 1960 |
| 15 | Manipur | Imphal | 21 Jan. 1972 |
| 16 | Meghalaya | Shillong | 21 Jan. 1972 |
| 17 | Mizoram | Aizawl | 20 Feb. 1987 |
| 18 | Nagaland | Kohima | 1 Dec. 1963 |
| 19 | Odisha | Bhubaneswar | 26 Jan. 1950 |
| 20 | Punjab | Chandigarh | 1 Nov. 1966 |
| 21 | Rajasthan | Jaipur | 1 Nov. 1956 |
| 22 | Sikkim | Gangtok | 16 May. 1975 |
| 23 | Tamil Nadu | Chennai | 1 Nov. 1956 |
| 24 | Telangana | Hyderabad | 2 Jun. 2014 |
| 25 | Tripura | Agartala | 21 Jan. 1972 |
| 26 | Uttar Pradesh | Lucknow | 24 Jan. 1950 |
| 27 | Uttarakhand | Dehradun (Winter) Gairsain (Summer) | 9 Nov. 2000 |
| 28 | West Bengal | Kolkata | 1 Nov. 1956 |

## தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள்



## விடுகதைகள் – 1

1) இருட்டில் மினுமினுக்கும், ஆனால் நட்சத்திரம் அல்ல. அது என்ன?
2) சங்கீத பாட்டுக்காரன், மழையில் கச்சேரி செய்வான். அவன் யார்?
3) அடை மழையில் குடை பிடிப்பான். அவன் யார்?
4) உச்சி கிளையில் ஒரு முழு குச்சி ஊசல் ஆடுது. அது என்ன?
5) தேடிகிடைத்த இரையை, கூடி கூடி உண்பவன். அவன் யார்?

**S. ரேஷ்மா, ஆறாம் வகுப்பு, திருமங்கலம், ஸ்ரீபெரும்புதூர்**

## கவிதை

அன்னை தமிழே என் ஆவி கலந்தவளே!
என்னை வளர்ப்பவளே! என்னில் வளர்பவளே!
உன்னைப் புகழ்வதற்கே உலகில் பிறப்பெடுத்தேன்!
சொல்லில் விளையாட சொல்லித் தந்தவளே!
சொல்லில் உனது புகழ் சொல்ல முடியலையே!

**பவஸ்ரீ, ஆறாம் வகுப்பு,**
**பட்டுநூல் சத்திரம், ஸ்ரீபெரும்புதூர் – 4**

## காமராசர் பாடல்

கண்ணுல கண்டா...
கண்ணுல கண்டா கண்ணீர் வருதே கருமவீரரே
எங்களுக்கு காமராசரே...

இங்கே நானும் ஏழைதான் எழுத்தறிவு தொலைவு தான்...
இங்கே நானும் ஏழைதான் எழுத்தறிவு தொலைவு தான்...

நீ விதைத்த விதைதான் நா இப்போ படிக்கிற நிகழ்வுதான்...
நீ விதைத்த விதைதான் நா இப்போ படிக்கிற நிகழ்வுதான்...

**ரா. ரிஷிகா, ஆறாம் வகுப்பு, சந்தவேலூர், ஸ்ரீபெரும்புதூர் – 2**

## கவிதை எங்கள் ஊர்க்குளம்

- நல்ல மழை பெய்தது ஊர்க்குளம் நிறைந்தது – எல்லோருக்கும் சந்தோஷம், குட்டி ஆடு வந்தது குளத்து நீரில் குதித்தது – குதித்து ஆட்டம் போட்டது
- மாடு ஒன்று வந்தது குளத்து நீரை குடித்தது – தாகம் தீர்ந்து போனது, நாரைக் கூட்டம் வந்தது தண்ணீர் மேலே பறந்தது – மீனைக் கவ்விச் சென்றது
- தட்டான் ஒன்று வந்தது நூறு முட்டை போட்டது – சுற்றிச் சுற்றி பறந்தது, கழுதை ஒன்று வந்தது குளத்தில் முகம் பார்த்தது – நான் அழகு என்றது
- தவளை ஒன்று வந்தது நாக்கை நீட்டிப் பிடித்தது – பூச்சிகளைத் தின்றது, தண்ணீர்ப் பாம்பு வந்தது மீன் குஞ்சைப் பார்த்தது – லபக் கென்று விழுங்கியது
- நீர்க் கோழி வந்தது குளத்துக் கரை பாசியை – கொத்தி கொத்தித் தின்றது, நண்டு ஒன்று வந்தது ஓடு இல்லா நத்தையை – ஒரே பிடி பிடித்தது
- வெள்ளைக் கொக்கு வந்தது ஒரு காலில் நின்றது – மீனைக் கொத்தித் தின்றது, குட்டிப் பையன் தூண்டில் எடுத்து வந்தான் – கெண்டை மீன் பிடித்தான்
- மூன்று தெரு பெண்கள் துணி துவைக்க வந்தனர் – தொம்... தொம்... தொம்..., தாத்தா ஒருவர் வந்தார் ஆறு வயது பேத்திக்கு – நீச்சல் பழகித் தந்தார்.

**S. வெனுஸ்ரீ , ஆறாம் வகுப்பு, மாவூர், ஆற்காடு குப்பம்**

## விடைகள் விடுகதைகள் 1:

1) மின்மினிப்பூச்சி
2) தவளை
3) குடை மிளகாய்
4) முருங்கைக்காய்
5) காகம்

## விடுகதைகள் – 2

1) இவனும் ஒரு பேப்பர் தான் ஆனால் மதிப்போடு இருப்பான். அவன் யார்?
2) வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை. அது என்ன?
3) ஒற்றை கால் மனிதனுக்கு ஒன்பது கை. அது என்ன?
4) தாகம் தீர்க்கும் தண்ணீர் சொம்பு அந்தரத்தில் தொங்குது. அது என்ன?
5) சின்ன கதவுகள் லட்சம் முறை மூடி திறந்தாலும் ஓசை வராத கதவுகள். அது என்ன?
6) எண்ணெய் குடித்து விட்டு ஏழு கடல் தாண்டுவான். அவன் யார்?
7) குண்டு ராஜாவுக்கு குடல் முழுக்க பல். அது என்ன?
8) தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான். அவன் யார்?
9) முறையின்றி தொட்டால் ஒட்டிக்கொண்டு உயிரை எடுப்பான். அவன் யார்?
10) கண்ணால் பார்க்கலாம், கையால் பிடிக்க முடியாது. அவன் யார்?

**A. ஆமினா நஸ்ரின், ஆறாம் வகுப்பு,**
**பட்டுநூல் சத்திரம், ஸ்ரீ பெரும்புதூர் – 4**

## நேர்மை கதை

ஒரு நாள் இரண்டு சிறுவர்கள், பள்ளிக்கூடம் முடித்து வீட்டுக்கு சென்று கொண்டிருந்தனர். இரண்டு சிறுவர்கள் பெயர் ராமன், மாதவன். ராமனும், மாதவனும் வீட்டுக்கு செல்லும் வழியில் ஒரு பணப்பையை பார்த்தனர். ராமர் ஓடிச் சென்று அந்த பணப்பையை எடுத்தான். மாதவன் அதைத் திறந்து பார்த்தான். அதில் ஆயிரம் ரூபாய் இருப்பதைக் கண்டு இருவரும் “ஆ” வென்று வாயைப் பிளந்தனர். நாம் இந்த பணப்பையை வைத்து ஏதேனும் சாப்பிட வாங்கலாமா என்று கேட்டான். மாதவனுக்கு அச்செயல் தவறானது எனத் தோன்றியது. ராமா, “இப்பையை தொலைத்தவர் பாவம் இல்லையா? அவர் இதை தேடிக்கொண்டு வருவர். அவரிடம் இப்பையைக் கொடுத்து விட்டு வீட்டிற்கு செல்லலாம்” என்று கூறினான். அப்போது, ஒரு முதியவர் அந்தப்பையைத் தேடிக்கொண்டு அங்கே வந்தார். இருவரும் அப்பையை அவரிடம் ஒப்படைத்தனர். அம்முதியவர் இருவரின் நேர்மையை மனதாரப் பாராட்டி நன்றி கூறினார். பிறர் பொருளுக்கு ஆசைபடாமல் நேர்மையாக வாழ வேண்டும்.

**S. ரேஷ்மா, ஆறாம் வகுப்பு, திருமங்கலம், ஸ்ரீபெரும்புதூர் – 3**

## கதை அப்பாடா, ஆண்டவா!

குதிரை வியாபாரி ஒருவரிடம், இளைஞன் ஒருவன் இலட்சம் ரூபாய் கொடுத்து நல்ல குதிரை ஒன்றை விலைக்கு வாங்கினான். வியாபாரி குதிரையை அவனிடம் தரும்போது, “இந்த குதிரை ஓட வேண்டுமானால், அப்பாடா என்று கூறவேண்டும். ஓடும் குதிரையை நிறுத்த வேண்டுமானால், ஆண்டவா என்று கூறவேண்டும். இப்படிதான் இந்தக் குதிரைக்கு நான் பயிற்சி அளித்திருக்கிறேன் என்றார்.

இளைஞன் குதிரை மீது ஏறி அப்பாடா என்றான்.

குதிரை ஓட ஆரம்பித்தது. அப்பாடா அப்பாடா என்றதும் குதிரை சற்று வேகமாக ஓடியது. தொடர்ந்து இவன் அப்பாடா அப்பாடா என்று ஓயாமல் சொல்லச் சொல்ல குதிரையும் மின்னல் வேகத்தில் மலையின் வளைவுப் பாதைகளில் ஓடியது. குதிரை மலை உச்சிக்கும் வந்து விட்டது. கிழே அதலபாதாளம் இதைப் பார்த்ததும், குதிரையை நிறுத்தும் சொல்லை மறந்து விட்ட இளைஞன் நிச்சயம் சற்று நேரத்தில் இறக்கப்போகிறோம் அதற்குள் ஆண்டவா என அழைப்போம் என்று எண்ணிக்கொண்டே ஆண்டவா என்று கத்தினான். இந்தச்சொல்லைக் கேட்டதும் குதிரை மலை உச்சியில் ஆடாமல் அப்படியே நின்றது. இதை எதிர்பார்க்காத அந்த இளைஞன் உடனே மகிழ்ச்சியோடு அப்பாடா என்றான் குதிரை என்ன செய்திருக்கும்? இளைஞனின் நிலை என்னவாய் இருந்திருக்கும்?

முதலில் கூறிய அப்பாடா இளைஞனுக்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளித்தது. ஆனால், அதே அப்பாடா இறுதியில் அவனை மரணத்திற்குத் தள்ளியது. இதனால்தான் அறிஞர்கள் ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும் என்றனர்.

**M. அபிநயா, எட்டாம் வகுப்பு, பட்டுநூல் சத்திரம், ஸ்ரீ பெரும்புதூர் – 4**

## சுற்றுச் சூழல் பாடல்

- மாறிப் போச்சு மாறிப் போச்சு சுற்றுச் சூழல் மாறிப் போச்சு, நாசமாச்சு நாசமாச்சு நாடு நகரம் நாசமாச்சு,
- புதுசு புதுசா வந்ததால நாடு முழுக்க குப்பையாச்சு விழிப்புணரவு இல்லாததால் சுற்றுச் சூழல் மாசு ஆச்சு
- பிளாஸ்டிக் பேப்பர் எரிப்பதாலும், குளிர்சாதனப் பெட்டியாலும், ஒசோன் மண்டலம் ஓட்டையாச்சு வெப்பநிலை அதிகமாச்சு
- வாகனம் புகையிலும், தொழிற்சாலை புகையிலும், வழக்கமான பருவ நிலை, முழுமையாக மாறிப்போச்சு
- மாறிப்போச்சு மாறிப்போச்சு சுற்றுச் சூழல் மாறிப்போச்சு நாசமாச்சு நாசமாச்சு நாடு நகரம் நாசமாச்சு
- வெய்யில் தாக்கம் அதிகமாகி பணிப் பாறைகள் உருகுதுங்க, நாம வசிக்கும் இடங்களெல்லாம் கடலில் முழுகப் போகுதுங்க
- பிளாஸ்டிக் எரிப்பதை நிறுத்தனுங்க, வருமுன் அவஸ்தை தடுக்கனுங்க.
- மண்ணின் நுண்ணுயிரைக் காக்கனுங்க, மறு சுழற்சி செய்யனுங்க,
- ஓசோன் மண்டலத்தை காத்து நம்ம சந்ததி வாழ வழி செய்யுங்க.
- மாறிப் போச்சு மாறிப் போச்சு சுற்றுச் சூழல் மாறிப் போச்சு நாசமாச்சு நாசமாச்சு நாடு நகரம் நாசமாச்சு

**காவ்யஸ்ரீ, ஐந்தாம் வகுப்பு, சந்தவேலூர், ஸ்ரீபெரும்புதூர் 2**

## கதை அன்பென்னும் அருங்குணம்
## என்பிலதனை வெயில்போலக் காயுமே அன்பிலதனை அறம்

ஒரு காட்டில் பெரிய மரம் ஒன்று இருந்தது அம்மரத்தில் பறவைகளும் விலங்குகளும் வாழ்ந்து வந்தன. அங்கு இருந்த கரடி மட்டும் சேட்டைகள் பல செய்து வந்தது. பறவையின் கூட்டை எட்டிப்பார்க்கும். குஞ்சுகள் என்றும் பாராமல் இதோ உங்களை தூக்கி எரிகிறேன் பாருங்கள் என்று கூட்டைப் பிய்த்து எறியும். குரங்குகள் வந்தால் தங்கவே இடம் தராமல் துரத்தி விட்டுவிடும். சில சமயங்களில் குட்டிகுரங்குகளின் தலையில் குட்டு வைக்கும். அவை தலை வீங்கி அழுவதைப் பார்த்து சிரிக்கும். இவ்வாறு யாரிடமும் அன்பு காட்டாமல் வெறுப்புடனே நடந்து கொள்ளும். அதனால் பறவைகளும், குரங்குகளும் வேறு மரத்திற்கே சென்றுவிட்டன. ஒரு முறை வேடன் ஒருவர் விரித்துவைத்திருந்த வலையில் எதிர்பாராமல் கரடி சிக்கிகொண்டது, அது காடே அதிரும் வகையில் சத்தமிட்டு அலறியது. வேடன் விரித்த வலையிலிருந்து தன்னை காப்பாற்றும்படி கதறியது. ஆனால், ஒருவரையும் காணோம். தான் யாரிடமும் அன்பு காட்டாமல் இருந்ததுதான் இந்த நிலைமைக்கு காரணம் என்பதை உணர்ந்து ஓவென அழுதது அவ்வேலையில் கரடியின் சத்தம் கேட்டு வந்த பறவைகள் வேடனைக் கொத்திக் கொத்தித் துரத்தின. குரங்குகள் வலையைப் பிய்த்துக் காப்பாற்றின. அன்று முதல் கரடி எல்லோரிடமும் அன்பு செலுத்த தொடங்கியது.

**ரேஷிகா.மு, கச்சிப்பட்டு, ஸ்ரீ பெரும்புதூர்**

## கவிதை

கல்வி என்பது கடல்
அதை கற்றுக் கொள்வது தவம்
நம்பிக்கை கை விட்டாலும் நீ கற்ற
கல்வி என்றும்
உன்னை கை விடாது

**நீ.ஜோஸ்னி, நான்காம் வகுப்பு**
**செக்கடி குப்பம், வாலஜா சஞ்ச்**

## கவிதை

வலிகளைத் தாங்கும் கல் சிலையாகிறது...
வலிகளைத் தாங்கும் மனம் உயர்வாகிறது !
சோதனையில் வெற்றி நம்பிக்கையில் பலம்
இதுதான் சாதனையின் தாரக மந்திரம்...

பூக்களே அவர்கள் புத்தகங்கள்
வண்டுகளே வாசக சாலைகள்
பறவைகளின் பாடல்களில் தேர்வு கேள்விகள்
நடனமும் மகிழ்ச்சியுமே நாட்டுப்பண்
என கல்வி நிலை மெல்லினமாய் மாறும்
தமிழ்மொழி கல்வியில் மட்டுமே...

**பா. ரித்தீஸ், ஐந்தாம் வகுப்பு,**
**பட்டுநூல் சத்திரம், ஸ்ரீபெரும்புதூர் – 4**

## MY JOURNAL

Parrot is a Bird – it lays Eggs
It has feathers, It is Green in Color
It eats Fruits and Seeds
It lives in Trees
It has Red Neck It Can Fly.

**S.Sai Shankar, IVth Std.,**
**Mavoor, Arcot Kuppam Sanch.**

## விடைகள் விடுகதைகள் 2:

1) பணம்
2) செருப்பு
3) மரம்
4) இளநீர்
5) கண் இமைகள்
6) விமானம்
7) மாதுளை
8) தொலைபேசி
9) மின்சாரம்
10) நிழல்

## நான் விரும்பும் தலைவர் அப்துல் கலாம்

**முன்னுரை :**

நான் விரும்பும் தலைவர்களில் அப்துல்கலாம் அவர்களுக்கு எப்போதும் ஒரு தனியிடம் உண்டு. பின்னாளில் இவர் இந்தியாவின் குடியரசு தலைவராக உயர்ந்தவர்.

**பிறப்பு :**

அப்துல் கலாம் அவர்கள் 1931 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் தேதி ஜைனுவாப்தீன்கும் ஆயிஷாமாவிற்கும் மகனாக இராமேஸ்வரத்தில் பிறந்தார். 1955 இல் சென்னை எம்.ஐ.டி கல்லூரியில் சேர்ந்து விண்வெளி பொறியியல் படிப்பு படித்தார். 1960 இல் மத்திய அரசின் பாதுகாப்பு மற்றும் வானூர்தி அபிவிருத்தி அமைப்பில் விஞ்ஞானியாக தனது ஆராய்ச்சி வாழ்க்கையை தொடங்கினார்.

**முடிவுரை :**

AIJ அப்துல் கலாம் அவர்கள் 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் தெதி மேகாலயா தலைநகர் ஷில்லாங்கில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும் பொழுதே இறந்துவிட்டார்.


## மகாத்மா காந்தி

மகாத்மா காந்தி அவர்கள் 1869 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி அன்று குஜராத் மாநிலத்தின் போர்பந்தர் என்ற ஊரில் பிறந்தார். இவரது தந்தை கரம்சந்த் காந்தி மற்றும் அவரது தாயார் புத்லிபாய் ஆவார். இவரது தாய்மொழி குஜராத்தி ஆகும். காந்திஜி தனது 15 வயதில் திருமணம் செய்து கொண்டார், அவரது மனைவியின் பெயர் கஸ்தூர்பாய் காந்தி. காந்தியின் 16 வது வயதில் அவரின் தந்தை மரணமடைந்தார்.

**தனுஸ்ரீ, எழாம் வகுப்பு, திருமங்கலம், ஸ்ரீபெரும்புதூர்**

# DRAWINGS

Veena





Drums




R. Jejasree, 8th Std, Karanthangal, SPR - IV


Guitar






V. Monisha, 6th Std







Thanu Sri, 7th Std





Subhathran, 6th Std



sts.ytchannel@gmail.com



J. Gayathri




S. Logitha, 5th Std




D. Kaviya Sri, 5th Std



E. Vishva, 6th Std




M. Indhu, 6th Std

# IMPACT ASSESSMENT REPORT

Third Party Audit (IMPACT ASSESSMENT) carried out by Social Audit Network – Chennai and the abstract of their report is given below:

## EDUCATION

### Villages

- The chosen Villages are remote, inaccessible through local transport and houses communities from lower economic background
- STS is only NGO providing access to free quality education in most of the Villages

### STS Centres

- In few of the centres, Acharya's are working with Field supervisor and community leaders' classes are anchored in local community hall or government school building or rented building creating a conducive learning environment for the children

### Children

- Children seem to have developed a comfortable and respectable bond with the Acharyas and follow all what has been taught in class.
- Children in most of the centres come to STS classes regularly, post attending extra classes or government anchored supplement educational classes in the school
- The interest in attending classes has increased among the children
- Children attend the STS prayers and proactively initiate the recitation in harmony at the start of the class
- Children are happy and excited to come to STS as they experience empowerment, freedom with rules, space to express themselves and pursue their interests
- Drawing and sports activity given by STS to the children has become an important activity
- Inherent talents of the children are getting developed that are enhancing

### Acharyas

- Most of the Acharya's are very committed and ensure that children are encouraged to attend the classes regularly to enable age appropriate learning through following:
    - Appreciate and acknowledge the winners of the events through small value gifts
    - Anchor events that are interesting to the children
    - Engage the child everyday creatively
    - Acharya's who are seasoned retired teachers or youngsters pursuing their college education came across as most popular among Children and Parents for their passionate, quality and innovative teaching
    - Many of the Acharya's have acknowledged that due to their employment in STS have earned a respect, recognition and a social status for them in the villages
    - Most of the parents are very happy and thankful to STS for providing good quality education to their children

## STS SWACHH BHARAT

The aim of Swachh Bharat Mission is to achieve a clean and Open Defecation Free India. STS has joined hands with the Government of India to achieve the goal of Open Defecation Free and healthy India.

- 100% of people are using toilets regularly of which 74.4% are women and children. This Demographic shows that, healthy practise has increased within the community
- 96% of the people said that their Health has been increased within the family and the community because of the toilets
- Medical expenses of 96% of the households has been reduced, after using toilets regularly
- 100% of people has accepted that Safety of women and children has increased by the toilets built by STS
- 100% of the people has understood the need of the toilet in their homes
- If STS has not built the toilet, 80% of the people would have not built toilets in their home

## Health - Eye Camp

STS conducted eye camp in order to provide quality health service in the rural areas.

- 84.62% of the beneficiaries of the eye camp are from lower economical background, who could not avail quality eye check-ups on their own.
- 79.49% of the beneficiaries are female, who has lesser access to their health
- 66.67% of the beneficiaries has done their eye test for the first time
- 92.31% of the beneficiaries remediated the condition by receiving the spectacles
- Awareness about Eye Care has been created among the villagers
- 76.92% of the beneficiaries were extremely satisfied with the quality of the eye camp
- 100% of the beneficiaries were able to independently perform their day to day work with enhanced confidence post the eye camp

## Pond Desilting

STS has restored Water Bodies by desilting Temple tanks & small water bodies in villages. So far 90 Temple tanks including the Chitrakulam Tank at Mylapore, Chennai have been de-silted. Nearly Three lakh villagers have benefited through this initiative.
The project has covered water bodies in remote villages like Konalam, Zamin endathur, Akkinampattu, Allikulam, Thathalur, Venugopalapuram and many more.

- 100% of the ponds has never been desilted before
- if not for STS all these ponds would have never been desilted or waiting for government's support for desilting
- Minimum 4700 people and 1000 cattle have benefitted from this desilting of pond in one village.
- Ground water level has risen in 100% of the villages



www.facebook.com/SingleTeacherSchools

# IMPACT ASSESSMENT REPORT

**Field Supervisors**

- All of the supervisors were observed to follow the STS rules in terms of visiting 3 centres per day
- All of the supervisors were observed to be comfortable in using the app

**Parents**

- Many of the parents encourage and ensure that their child attend STS regularly and in time
- Most of the parents wants to support their child in pursuing higher education as per their choice

# SWACHH BHARAT

SVRDS started construction of Toilet cum Bathrooms at free of cost to the Poor in villages in April 2015 and continuing with the support of Donors. Preference is in villages who are having more Girl Children. The construction of 3000th Toilet cum Bathroom completed in the month of May 2023 and the Management aiming to achieve 4000th construction of Toilet cum Bathroom soon. Received appreciation letters 3 times from The Honourable Prime Minister. Giving below the details of Toilet cum Bathrooms opened in October & November 2024 with Donors names.

## தூய்மை பாரதம்

பாரத பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடிஜி அவர்களின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கிராமங்களில் உள்ள பெண் குழந்தைகள் அதிகம் உள்ள குடும்பங்களுக்கு இலவசமாக குளியலறையுடன் கூடிய கழிப்பறைகள் ஓராசிரியர் பள்ளிகளின் மூலம் கட்டித்தரும் திட்டம் ஏப்ரல் 2015 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டு மே மாதம் மூவாயிரமாவது குளியலறையுடன் கூடிய கழிப்பறை கட்டி முடித்து பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த சீரிய திட்டத்தினை பாராட்டி பாரத பிரதமர் மூன்று முறை கடிதம் எழுதி உள்ளார். வெகு விரைவில் 4000 என்ற இலக்கை அடைய இருக்கிறோம் என்பதை ஓராசிரியர் பள்ளிகளின் நிர்வாகத்தினர் மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். அக்டோபர் நவம்பர் மாதங்களில் கிராமங்களில் கட்டி முடித்து பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்ட கழிப்பறையுடன் கூடிய குளியலறைகள் மற்றும் நன்கொடையாளர்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| SL.NO. | MONTH | VILLAGE | DISTRICT | UNITS | CORPORATE |
|---|---|---|---|---|---|
| 1 | OCTOBER 2024 | PUNNIYAM | TIRUVALLUR | 18 | INDIA DEVELOPMENT AND RELIEF FUND |
| 2 | OCTOBER 2024 | NALLAVANAMPETTAI | TIRUVALLUR | 2 | INDIA DEVELOPMENT AND RELIEF FUND |
| 3 | OCTOBER 2024 | BALAKRISHNAPURA | RANIPET | 10 | AMRUTANJAN HEALTH CARE LIMITED |
| 4 | OCTOBER 2024 | BALAKRISHNAPURA | RANIPET | 1 | MANTHAN VIDYASHRAM |
| 5 | OCTOBER 2024 | BALAKRISHNAPURA | RANIPET | 2 | Smt. T.K.VARALAKSHMI |
| 6 | NOVEMBER 2024 | PONDUR | KANCHIPURAM | 30 | SAINT GOBAIN INDIA PVT. LTD |
| 7 | NOVEMBER 2024 | PANRUTI | KANCHIPURAM | 22 | SAINT GOBAIN INDIA PVT. LTD |
| 8 | NOVEMBER 2024 | MATHUR | KANCHIPURAM | 15 | SAINT GOBAIN INDIA PVT. LTD |
| | | | TOTAL | 100 | |


A view of Toilet cum Bathroom at Mathur Village, Kanchipuram District

# THIRUKURAL COMPETITION



On Wednesday, the 2nd October, 2024, we have conducted Mega Thirukkural Competition at our Acharya Training Centre, Ulundai. 108 Students, 20 Numbers of parents and 94 Acharyas participated in the programme. At each Sanch, the competition was held over last 4-6 weeks and finally 3 Numbers from each Sanch (Total of 37 Sanches) who topped in each Sanch were selected for the final programme. The selected 108 Number of students recited Thirukkural very well and the best among them, 1st, 2nd, 3rd and consolation winners were selected from each standard and so 12 such students were selected Our Trainers of regular monthly program and Maths Trainer were the Judges and they had lots of difficulties in choosing the best because all performed well. The other Audience, Parents, Acharyas, Field Supervisors and office staff enjoyed the program and motivated the children. Dr. Shri. R. Krishnan, President distributed Prizes to the winning children with gift item, medal and certificate. All others were given participation certificate and Thirukkural book. The program was like a festival with all the children enjoyed every moment of the day.

## திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி



அக்டோபர் 2, 2024 புதன்கிழமை, உளுந்தையில் உள்ள ஆச்சார்யா பயிற்சி மையத்தில் மெகா திருக்குறள் போட்டி நடத்தினோம். இதில், 108 மாணவர்கள், 20 பெற்றோர்கள், 94 ஆச்சாரியர்கள் பங்கேற்றனர். ஒவ்வொரு சஞ்சிலும், கடந்த 4 முதல் 6 வாரங்களாக போட்டி நடைபெற்றது, இறுதியாக ஒவ்வொரு சஞ்சிலும் முதலிடம் பிடித்த (மொத்தம் 37 சஞ்ச்கள்) 3 மாணவர்கள் இறுதி நிகழ்ச்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட 108 மாணவர்கள் திருக்குறளை மிகச் சிறப்பாக ஒப்புவித்தனர், அவர்களில் சிறந்தவர்களான முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் ஆறுதல் வெற்றியாளர்கள் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வழக்கமான மாதாந்திர பயிற்சியாளர்கள் நடுவர்களாக இருந்தனர், மேலும் அனைவரும் சிறப்பாக செயல்பட்டதால் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களுக்கு நிறைய சிரமங்கள் இருந்தன. பெற்றோர்கள், ஆச்சார்யர்கள், கள மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் நிகழ்ச்சியை ரசித்து குழந்தைகளை ஊக்குவித்தனர். வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு தலைவர் Dr. ஸ்ரீ. R. கிருஷ்ணன் பரிசு, பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். மற்றவர்கள் அனைவருக்கும் திருக்குறள் புத்தகங்கள் வழங்கப்பட்டது.

# DE SILTING OF 107th VILLAGE TEMPLE POND



In the month of October 2024 we carried out desilting activity of Sri Muneeswarar Temple Pond, Thappur Village, Sholingur Block, Ranipet district where the population is above 3000. With this, we completed 107 Ponds desilting so far. The cost involved for desilting the pond, strengthen the buds, making one mini pond in the center of the main pond to enable storing of more water was **Rs. 2.32 Lakhs.** INDIA DEVELOPMENT AND RELEIF FUND - USA are the sponsor of this project. Smt. Veda Sowndari and Smt. Sangeetha, Field Supervisors took the initiative from identifying till completion of work in all aspects. There were no steps in the pond earlier and now we constructed the steps. The villagers, Panchayat President were so happy to see the pond after the completion of all works because they confessed that to their knowledge it was not at all cared by anyone till STS took initiative and thanked President Dr. Shri. R. Krishnan & STS for this noble work.




## 107வது கோவில் குளம் தூர்வாரும் பணி



அக்டோபர் மாதத்தில் ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் வட்டம் தப்பூர் கிராமத்தில் முனீஸ்வரர் கோவில் குளம் தூர்வாரப்பட்டது. இதன் மூலம் அக்கிராமத்தை சேர்ந்த 3000 பொதுமக்கள் பயனடைந்தனர். அமெரிக்காவை சேர்ந்த IDRF தொண்டு நிறுவனம் அதற்கான தொகையான **ரூபாய் 2.32 லட்சங்கள்** நன்கொடை அளித்தனர். இக்குளம் தூர்வாரப்பட்டு கரைகள் பலப்படுத்தப்பட்டு குளத்தின் நடுவில் மற்றொரு சிறு குளமும் உருவாக்கப்பட்டுள்ளது. ஊர் பொதுமக்கள் பல ஆண்டுகளாக கவனிப்பாரற்று இருந்த குளத்தை முழுதாக சீர் செய்து கொடுத்தமைக்காக நன்கொடையாளருக்கும், ஓராசிரியர் பள்ளிகளின் தலைவர் ஸ்ரீ. Dr. R. கிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து கொண்டனர். கள மேற்பார்வையாளர்கள் ஸ்ரீமதி. வேதசௌந்தரி மற்றும் ஸ்ரீமதி. சங்கீதா ஆகியோரின் பரிந்துரையின்படி இக்குளம் தூர்வாரப்பட்டது.



# FREE CAR DRIVING



Dr. Shri. R. Nataraj, (Ex-Chairman, STS and Ex-MLA) and Ex-Honorary Secretary Late Shri. R.P. Krishnamachari Ji, on behalf of STS initiated the project of free Car Driving Training with License for girls on 18-10-2021. So far, 26 Batches have been conducted and 650 women have benefited. Donors for this training are like Sri Hasmukhlal D. Vora, India Development and Relief Fund USA, ARSR Foundation, Brakes India Pvt.Ltd, Smt.Dhanavidya Dhirajlal Vora, RANE Holdings etc.



Dr. Shri R. Krishnan, President, STS, thank all the Donors. Many of the people trained are working in the best places. The training sessions for the 25th and 26th batches were started on 5th October and 7th December respectively. Dr. Shri. R. Nataraj, Shri. D. Rajkumar on behalf of STS and ex-beneficiaries were present.

## இலவச மகிழுந்து ஓட்டுநர் பயிற்சி

ஓராசிரியர் பள்ளிகளின் சார்பில் Dr. Shri. R. Nataraj, (முன்னாள் தலைவர், ஓராசிரியர் பள்ளிகள் மற்றும் முன்னாள் MLA) மற்றும் மறைந்த முன்னாள் கவுரவ காரியதரிசியான Shri. R.P. Krishnamachari Ji, யின் முயற்சியால் பெண்களுக்கான இலவச மகிழுந்து ஓட்டுநர் பயிற்சி வகுப்புகள் 18–10–2021 முதல் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 26 குழுவாக நடத்தப்பட்டு 650 பெண்கள் பயனடைந்து உள்ளனர். இதற்கான பண உதவி செய்பவர்களான Sri Hasmukhlal D. Vora, India Development and Relief Fund USA, ARSR Foundation, Brakes India Pvt. Ltd., Smt. Dhanavidya Dhirajlal Vora, RANE HOLDING போன்றவர்களுக்கு Dr. ஸ்ரீ. R. கிருஷ்ணன், தலைவர், ஓராசிரியர் பள்ளிகள் மற்றும் நிர்வாகிகள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இதில் பயிற்சி பெற்றவர்கள் பலர் சிறந்த இடங்களில் பணிபுரிகின்றனர். சென்ற அக்டோபர் மாதம் 5ம் தேதி மற்றும் டிசம்பர் மாதம் 7ம் தேதிகளில் 25 மற்றும் 26ம் குழுக்களுக்கான பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டன. ஓராசிரியர் பள்ளிகளின் சார்பில் Dr. Shri. R. Nataraj, ஸ்ரீ. D. ராஜ்குமார், மற்றும் முன்னாள் பயனாளிகள் கலந்துகொண்டனர்.

# DONATION BY SANKALP BEAUTIFUL WORLD



SANKALP BEAUTIFUL WORLD - Chennai donates Cloths, Chocolates and Toys frequently to be distributed to the students studying in Single Teacher Schools and when we distribute to the students they are delighted and very thankful to Donor.

SANKALP also donated wheat Flour to all our Acharyas which they took with heart full of thanks. The Acharyas are glad that one of their home needs also being taken care by a donor and thanked SANKALP BEAUTIFUL WORLD & its CEO Shri. Gowtham Chandar.



## சங்கல்ப் பியூட்டிஃபுல் வேர்ல்ட் – சென்னை, நன்கொடை



ஓராசிரியர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு விநியோகிக்க துணிமணிகள், சாக்லேட்கள் மற்றும் பொம்மைகளை அடிக்கடி நன்கொடையாக வழங்கி வருகிறார்கள். மேலும் ஓராசிரியர் பள்ளி மாணவர்களுக்கு அவற்றை விநியோகிக்கும்போது, அந்த மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறார்கள் மற்றும் நன்கொடையாளருக்கு நன்றி தெரிவிப்பார்கள்.

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆச்சார்யர்களுக்கு விநியோகம் செய்வதற்காக, சங்கல்ப் பியூட்டிஃபுல் வேர்ல்ட் 1 கிலோ கோதுமை மாவு 1000 பாக்கெட்டுகளை வழங்கினர். ஆச்சார்யாக்கள் தங்கள் வீட்டிற்கு தேவையான பொருட்களை நன்கொடையாக அளித்து வருவதற்கு தங்களது மகிழ்ச்சியை தெரிவித்தனர். சங்கல்ப் பியூட்டிஃபுல் வேர்ல்ட், அதன் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்ரீ. கௌதம் சந்தர் மற்றும் ஓராசிரியர் பள்ளிகளின் தலைவர் Dr. ஸ்ரீ R.கிருஷ்ணன் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தனர்.



## DONATION BY VISWA HINDU VIDYA KENDRA SCHOOLS STUDENTS



Dr. Smt. Girija Seshadri arranged for the Diwali Gifts of dresses by their students of Jai Gopal Garodia Hindu Vidyalaya Matriculation Hr. Sec. School, West Mambalam, Seethadevi Garodia Hindu Vidyalaya Matriculation Hr. Sec. School East Tambaram, G.K. Shetty Hindu Vidyalaya Matriculation Hr. Sec. School, Adambakkam & Hindu Vidyalaya Nursery & Primary School, AGS Colony and handed over the carton boxes of dresses to STS officials in a function at JGHV Mat. Hr. Sec.School, West Mambalam, Shri. S. Senthil Kumar & Shri. E.S. Seetharaman from Single Teacher Schools Admin Office, CIT Nagar attended the function and received from Dr. Smt. Girija Seshadri.

The carton boxes were brought to SVRDS Acharyas Training Center Ulundai, Tiruvallur Dist and distributed to STS Students of Sriperumbudur Sanch. On behalf of Board members Acharyas & Students, the President Dr. Shri. R. Krishnan thank the students and Madam for the humanitarian gesture.

## விஸ்வ ஹிந்து வித்யா கேந்திரா மாணவ, மாணவிகளின் தீபாவளி பரிசு



விஸ்வ ஹிந்து வித்யா கேந்திரா பள்ளிகளின் காரியதரிசி மற்றும் தலைமை தாளாளருமான Dr. ஸ்ரீமதி. கிரிஜா சேஷாத்ரி அவர்களின் ஏற்பாட்டின்படி மேற்கு மாம்பலம் ஜெயகோபால் கரோடியா ஹிந்து வித்யாலயா மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளி, சீதாதேவி கரோடியா ஹிந்து வித்யாலயா மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளி கிழக்கு தாம்பரம், ஜி.கே.ஷெட்டி ஹிந்து வித்யாலயா மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளி ஆதம்பாக்கம். ஹிந்து வித்யாலயா நர்சரி – பிரைமரி பள்ளி AGS காலனி ஆகிய பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் புதிய ரெடிமேட் ஆடைகளை, ஓராசிரியர் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு தீபாவளி பரிசாக வழங்கும் நிகழ்ச்சி அக்டோபர் மாதம் 29 ஆம் தேதி அன்று மேற்கு மாம்பலம் ஜெயகோபால் கரோடியா ஹிந்து வித்யாலயா மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.



ஓராசிரியர் பள்ளிகளின் சார்பில் ஸ்ரீ. S. செந்தில் குமார், ஸ்ரீ. E.S. சீதாராமன் ஆகியோர் கலந்து கொண்டு புதிய ரெடிமேட் ஆடைகள் அடங்கிய பரிசு பெட்டிகளை பெற்றுக்கொண்டனர். ஸ்ரீபெரும்புதூர் சஞ்சில் உள்ள ஓராசிரியர் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

## ACHARYAS SPECIAL TRAINING



To improve the knowledge of Acharyas, special training by Dr. Smt. R. Rajammal, educationist, three times President Awardee being arranged once in three months for all Acharyas. Dr. Smt. R. Rajammal, only designing the syllabus for Single Teacher Schools with the help of her team of experts in educational field. The team train Acharyas in English, Maths, Tamil & EVS based on Syllabus as well as the Teaching Methodologies. Madam trained all Acharyas in Assembly activity to be performed by students before starting of class every day and Acharyas train students at Centers which has improved the talent of students in English, General Knowledge and removed fear to address gathering. In the months of Nov 9th & 10th and December 8th the training session was held and all Acharyas attended training in batches.



## ஆச்சார்யார்களுக்கான சிறப்பு பயிற்சி



ஆச்சார்யார்களின் பயிற்றுவிப்பு திறனையும், ஓராசிரியர் பள்ளிகளின் பாடத்திட்டத்தின் படி வகுப்பு எடுக்கும் திறனையும் மேம்படுத்துவதற்காக சிறந்த கல்வியாளரும், மூன்று முறை குடியரசுதலைவரிடம் விருது பெற்றவரும் ஆன DR. ஸ்ரீமதி. R. ராஜம்மாள் அவர்களை கொண்டு வருடா வருடம் அனைத்து ஆச்சார்யார்களுக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஓராசிரியர் பள்ளிகளின் பாடத்திட்டத்தை Dr. ஸ்ரீமதி. R. ராஜம்மாள் அவர்கள் சிறந்த கல்வியாளர்களை கொண்டு உருவாக்கி தருகிறார். இப்பயிற்சி வகுப்புகளில் கணிதம், தமிழ், ஆங்கிலம், EVS ஆகிய பாடங்கள் ஓராசிரியர் பள்ளி மாணவர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் வகுப்புகள் எடுப்பதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் வகுப்பு துவங்குவதற்கு முன் தினமும் மாணவர்களை கொண்டு அசெம்பிளி நிகழ்த்துவது பற்றியும் ஆச்சார்யார்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதனால் மாணவர்களின் பொது அறிவு வளர்வதுடன் மேடை கூச்சம் அகல்வதால் பொதுவெளியில் பழகுவதற்கு எளிதாகிறது. நவம்பர் 9–10 தேதிகளிலும், டிசம்பர் 8 ஆம் தேதியும் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.




### சுவாமி விவேகானந்தர் பொன்மொழிகள்



நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்; உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்! (ஆனால் முயற்சி தேவை)

இதயம் சொல்வதை செய் வெற்றியோ தோல்வியோ அதை தாங்கும் சக்தி அதற்கு மட்டும் தான் உண்டு

### சுவாமி தயானந்த சரஸ்வதி ஜி பொன்மொழிகள்



*Give the world the best you have and the best will come back to you.*

*The highest form of service is to help a person who is incapable of thanking in return.*

**sts.ytchannel@gmail.com**

# DONOR VISIT



RANE Holdings Limited, Chennai supported us in training 25 women with Car driving and obtaining Licence by donating **2.50 Lakhs** in June 2024. Other than this they are supporting to run 15 Schools by donating **7.50 Lakhs** in the year 2023 - 2024.

On 10.12.2024, SHRI. VENKATESWARAN - SR. MANAGER – FINANCE & SMT. R. SINDHUJA - SR. MANAGER - FINANCE from Rane Holdings visited SVRDS Acharyas Training Center. Shri. D. Rajkumar & Shri. Senthilkumar explained them about various projects being executed by Single Teacher Schools and about the Training Centre activities. Then went around SVRDS Shri. R.P. Krishnamachari Skill Training centre. Shri. P.B. Vijayaragavan took them to all Labs & briefed about the various courses taught.

They visited STS Centres at Kachipattu 1 and Pattunoolchathram near Sriperumpudur. Sri. D. Rajkumar & Shri. Senthilkumar briefed about various activities taught at schools and explained about attendance, lesson planning, educational materials provided etc. The visitors interacted with the children and appreciated the knowledge they gain at our centres. Field Supervisors Sri. Manivannan and Sri. Anbazhagan also accompanied during the visit.

# நன்கொடையாளர் விஜயம்



சென்னையில் உள்ள ரானே ஹோல்டிங்க்ஸ் லிமிடெட் நிறுவனம் 2024 ஜூன் மாதம் 25 பெண்களுக்கு மகிழுந்து ஓட்டுநர் பயிற்சிக்காக **₹2.50 லட்சங்களும்**, 2023–2024 ஆண்டில் 15 ஓராசிரியர் பள்ளிகள் நடைபெற **₹7.50 லட்சங்களும்** நன்கொடை அளித்துள்ளனர். 10–12–2024 அன்று அந்நிறுவனத்தில் இருந்து SHRI. VENKATESWARAN & SR. MANAGER - FINANCE & SMT. R. SINDHUJA - SR. MANAGER - FINANCE, உளுந்தையில் உள்ள SVRDS பயிற்சி வளாகத்திற்கு விஜயம் செய்தனர். ஸ்ரீ. D. ராஜ்குமார் மற்றும் ஸ்ரீ. S. செந்தில் குமார், ஓராசிரியர் பள்ளிகள் மூலம் நடைபெறும் பல்வேறு செயல் திட்டங்களை பற்றி விளக்கினார்கள். ஸ்ரீ. P.B. விஜயராகவன், SVRDS ஸ்ரீ R.P. கிருஷ்ணமாச்சாரி திறன் பயிற்சி மையம் மூலம் நடைபெறும் அனைத்து பயிற்சி வகுப்புகளுக்கும் அழைத்து சென்று விளக்கினார். பின்னர் அவர்கள் ஸ்ரீபெரும்புதூர் சஞ்சில் உள்ள கச்சிப்பட்டு – 1, பட்டுநூல்சத்திரம் இடங்களில் இயங்கும் ஓராசிரியர் பள்ளிகளுக்கு சென்றனர். ஸ்ரீ. D. ராஜ்குமார் மற்றும் ஸ்ரீ. S. செந்தில் குமார், ஓராசிரியர் பள்ளிகள் மூலம் கற்றுத்தரப்படும் கல்வி பற்றியும், பாடத்திட்ட செயல்பாடுகள், வழங்கபடும் கல்வி உபகரணங்கள் பற்றியும் விளக்கினர். விருந்தினர்கள் மாணவ, மாணவியருடன் கலந்துரையாடி, அவர்கள் இப்பள்ளியினால் பெறும் அறிவுதிறனை மெச்சினார்கள். கள மேற்பார்வையாளர்கள் ஸ்ரீ. மணிவண்ணன், ஸ்ரீ. அன்பழகன் ஆகியோரும் உடனிருந்தனர்.

**Acharyas impart the education learned in Single Teacher Schools to the students of Single Teacher schools**
**ஓராசிரியர் பள்ளிகளில் கற்ற கல்வியை ஓராசிரியர் பள்ளிகளின் மாணவர்களுக்கே அளிக்கும் ஆச்சார்யார்கள்**

| S.No | ACHARYA NAME | VILLAGE / SANCH | YEAR OF JOINING AS ACHARYA | EDUCATIONAL QUALIFICATION | AS SINGLE TEACHER SCHOOL STUDENT | PHOTO |
|---|---|---|---|---|---|---|
| 1 | Ms. G.K. Dillirani | Punniam Colony Village, Pallipet Sanch | 2024 | B.Com. | 2010 to 2018 (1st Std to 8th Std) |  |
| 2 | Ms. Keerthiga | Kiloy 1 Village, Sriperumbudur 1 Sanch | 2024 | BBA | 2013 to 2018 (5th Std to 9th Std) |  |
| 3 | Ms. Sharmila | Maduramangalam Village, Sriperumbudur 2 Sanch | 2024 | BCA | 2014 to 2018 (6th Std to 9th Std) |  |

## BANK DETAILS FOR INDIA

Account in the Name of : **Swami Vivekananda Rural Development Society**
Bank Name with Branch : AXIS BANK LTD
Branch Address : No.13-A, Maloni Street, T. Nagar, Chennai - 600 017.
Code : 1594
Account No : SB A/c. 082010100297851
IFSC Code : UTIB0001594
MICR No. : 600211053






## BANK DETAILS FOR NRI

Account in the Name of : **Swami Vivekananda Rural Development Society**
Bank Name with Branch : State Bank of India, New Delhi Main Branch,
Branch Address : FCRA Cell, 4th Floor, 11 Sansad Marg, New Delhi - 110001.
Account No : 40124775527 (FCRA Savings Account)
Branch Code : 00691
IFSC Code : SBIN0000691
SWIFT CODE : SBININBB104
PAN No. : AAATS4092E

Published by

# SINGLE TEACHER SCHOOLS

**Unit of Swami Vivekananda Rural Development Society - Established -1979**

**Registered Office :** 12(43), Ramanujam Street, T. Nagar, Chennai - 600 017. **Tel :** 91-44-2433 7640

**Admin. Office :** Flat No.1, "**NIVEDHA'S PATTU GOPALAN**", 15/4, West Road, West CIT Nagar, Nandanam, Chennai - 600 035.

**Phone :** +91-44-4350 8281 / 73388 63412 **E-mail :** admin@singleteacherschools.org

SRI RAGHAVENDRA SCREENS @ 98411 54688

**50% Tax Exemption under Section 80G of IT Act**